**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டு பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டம் – கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், மதுரை, செங்கல்பட்டு, திருப்பத்தூர், நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.1039.05 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண். 45** | **நாள் 15.03.2022**

பங்குனி மாதம் 1-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.ப.மே/அ3/8122/2021, நாள் 11 .10.2021 மற்றும் 18.11.2021

*******

**ஆணை :-**

மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் தரத்தை உயர்த்தும் வகையில் நலத் திட்டங்கள் செயல்படுத்துதல் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு ரூ.264.05 இலட்சத்திற்கு சாலை வசதியும், நாமக்கல் மாவட்டத்திற்கு சாலைவசதி, சமுதாயக்கூடம் மற்றும் உயர்மின் கோபுர விளக்கு ஆகிய பணிகளுக்கு ரூ. 273.55 இலட்சமும், தேனி மாவட்டத்தில் வீடு ஒன்றிற்கு பயனாளியின் பங்கு தொகை ரூ. 2.32 இலட்சம் வீதம் 32 பயனாளிகளுக்கு பங்குத்தொகை ரூ.74.24 இலட்சமும், மதுரை மாவட்டத்திற்கு 33 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு வீடு ஒன்றிற்கு ரூ.4.90 இலட்சம் வீதம் ரூ.161.70 இலட்சமும், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 20 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு வீடு ஒன்றிற்கு ரூ. 4.90 இலட்சம் வீதம் ரூ.98.00 இலட்சமும், திருப்பத்தூர் மாவட்டத்தில் சாலை வசதி ஏற்படுத்துவதற்கு ரூ.152.50 இலட்சமும், நீலகிரி மாவட்டத்திற்கு ரூ.89.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1113.29 இலட்சம் 2021-2022 ஆம் ஆண்டு பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு மற்றும் அரசாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், பழங்குடியின மக்கள் தரத்தை உயர்த்தி அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் வகையில் கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், மதுரை, செங்கல்பட்டு, திருப்பத்தூர், நீலகிரி (தேனீ மாவட்டம் நீங்கலாக) ஆகிய 7 மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு ரூ. 10,39,05,000/- (ரூபாய் பத்து கோடியே முப்பத்தி ஒன்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) 2021-2022 ஆம் ஆண்டு பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும்

கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | மாவட்டம் | பணி விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு | கோயம்புத்தூர் சிமெண்ட் சாலை வசதிகள் 4 எண்ணிக்கை மற்றும் ஈரோடு 13 எண்ணிக்கையிலான சாலைகள் | 264.05 |
| 2 | நாமக்கல் | நாமக்கல் மாவட்டத்திற்கு சாலைவசதி 4 எண்ணிக்கை, சமுதாயக்கூடம் 1 எண்ணிக்கை மற்றும் உயர்மின் கோபுர விளக்கு 4 எண்ணிக்கை | 273.55 |
| 3 | மதுரை | வீடற்ற பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டி தருவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.4.90 இலட்சம் வீதம் 33 வீடுகளுக்கு | 161.70 |
| 4 | செங்கல்பட்டு | வீடற்ற பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டி தருவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.4.90 இலட்சம் வீதம் 20 வீடுகளுக்கு | 98.00 |
| 5 | திருப்பத்தூர் | சாலை வசதிகள் 14 எண்ணிக்கையிலான சாலைகள் | 152.50 |
| 6 | நீலகிரி | சாலை வசதிகள் 5 எண்ணிக்கையிலான சாலைகள் | 89.25 |
| | | **மொத்தம்** | 1039.05 |

3. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் AA – பழங்குடியின மக்கள்அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்.
(IFHRMS DPC:4225-02-800-AA-41601)

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல்முறை ஆணையினை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.11854/நிதி [ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2022, நாள் 14.03.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம்,
சென்னை-600 005.
திட்ட அலுவலர்கள், பழங்குடியினர் நலம்,
நாமக்கல் மற்றும் திருப்பத்தூர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
கோயமுத்தூர், ஈரோடு, செங்கல்பட்டு, நீலகிரி மற்றும் மதுரை.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை-600 008.

நகல்
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1) துறை, சென்னை-600 009.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

C. Selvi Rev 16/3/22

அரசு சார்புச் செயலாளர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009
16/3/2022